(இ) 'மாலை முரசு' மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் 12—7—1977 அன்று, சென்னை பதிப்பு 'மாலை முரசு' செய்தித்தாள் ஆசிரியர் மீது பேரவையின் 184-வது விதியின்கீழ் ஒரு அவை உரிமை மீறல் பிரச்சனையை எழுப்புவதற்கு அறிவிப்புக் கொடுத்திருந்தார். அப்பிரச்சனையை 13—7—1977 அன்று எழுப்புவதற்கு எனது இசைவைக் கொடுத்தேன். அன்று, உறுப்பினர் அவர்கள் அப்பத்திரிகை எவ்வாறு அவை நடவடிக்கைகளை முழுதும் பிரதிபலிக்கும் வகையில் அன்றி, ஒரு கட்சி உறுப்பினர்களின் சொற்பொழிவுகளையே வெளியிட்டு இருந்தார்கள் என்றும், மற்ற உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கு கொண்டதை வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்துள்ளார்கள் என்றும், ஆகவே அவையின் நடவடிக்கைகளை திரித்துக் கூறி, வேண்டுமென்றே பிரசுரித்துள்ளார்கள் என்றும், ஆகவே அப்பத்திரிகை அவையினது உரிமைகளை மீறி உள்ளது எனக்கூறினர்.

சென்றக் கூட்டத் தொடரில், இப்பிரச்சனை குறித்து என்னுடைய தீர்ப்பை, இக்கூட்டத்தொடரில் கூறுவதாக சொல்லியிருந்தேன்.

'மாலை முரசு' பத்திரிகை ஆசிரியருக்கு இப்பிரச்சனை குறித்து விளக்கம் கேட்டதில் பின் வருமாறு கூறியுள்ளார்கள் :—

* * *

On persual of our issue, dated 8th July 1977 you will find that in the front page, we have published the point of Order raised by Mr. James (Janatha), Mr. A. R. Marimuthu (Congress), Mr. Sankariah (C.P.M.), Mr. Alagirisamy (C.P.I.) and Mr. Lathiff Muslim League) apart from the replies made by the Hon'ble Ministers. In the second page you will find that we have published the point of order of Mr. R. Umanath, the very member who has raised the privilege issue against us. On that day we have covered the news of all sections of the House and hence the allegations of Mr. Umanath that our readers will think that a section of the House did not take part, is not correct.

Further, the discussions on the Governor's address was not confined to 8th July 1977. It was spread over for seven days and we have published the speeches of members of all parties on the Governor's address in our issues dated, 9th, 11th, 12th, 13th, 14th, and 15th.

Therefre, you will find that there has been no suppression or black out of any particular section of the House, in its debates on the Governor's address, as alleged by the Members.

We assure you however, that we will be extra careful in future to see that no room is given to the public to think that any party did not take part in the proceedings of the House."

அன்றைய பத்திரிகையை பார்க்கும்போது, ஒரு சில உறுப்பினர்களது விவாத சொற்பொழிவுகளை முழுமையானதாக வெளியிட்டுள்ளார்கள். திரு ஏ. செல்வராஜ் அவர்கள் பேச்சும், ''சட்ட சபையில் சுப்பு (தி.மு.க.) பேச்சு'' என்ற தலைப்பில் ஐந்து பத்தி தலைப்பு கொடுத்து, ஐந்து பத்தி அளவில் வெளியிடப்பட்டுள்ளது. அன்று அவையில் ஏறக்குறைய 21 உறுப்பினர்கள் பங்கெடுத்துக்கொண்டுள்ளார்கள்.

அந்த உறுப்பினர்களின் பேச்சுக்களில் சிலவற்றைத் தவிர மற்றவர்களின் பேச்சுக்களைப் பற்றி, எந்தவிதத்திலும் சுருக்கியோ, அல்லது பங்கு கொண்டார்கள் என்ற குறிப்போ நான் பார்த்த வரையில் அந்த நாளிட்ட பத்திரிகையில் இல்லை.

அவையினது நிகழ்ச்சிகளை அல்லது இங்கு நடத்தப்படும் விவாதத்தின் பொருள்பற்றி கட்டுப்படுத்த இந்த அவைக்கு முழு உரிமை உண்டு. ஆனால் நடவடிக்கைகளை மாற்றியோ, திரித்தோ அல்லது வேறு விதமாக குறைத்தோ வெளியிடாது அவையில் நடந்ததை நடந்தவாறு முழுவதும் கூறுவிடினும், அதனுடைய சுருக்கத்தையாவது மாற்றம் இன்றி வெளியிட்டால் அவைபற்றி இப்பேரவை பொருட்படுத்தாது. ஆனால் இவைகளை, வேறு விதமான வகையில் குறைத்தோ, கூட்டியோ அல்லது திரித்தோ வெளியிட்டால், அது அவையின் உரிமையை மீறிய செயலாகக் கருதப்படும் என்பதற்கு நமது அவையிலும், பாராளுமன்றத்திலும், லண்டன் ஹவுஸ் ஆப் காமன்ஸ் சபையிலும் தீர்ப்புகள் எண்ணற்றவை இருக்கின்றன. ஆங்கிலத்தில் இதை சுருக்கமாகக் கூறினால்—

". . . . Each House has the power to control, and if necessary, to prohibit, the publication of its debates and proceedings. Normally, no restrictions are imposed on reporting the proceedings of the House But when the debates are reported malafide, that is, when a wilful misrepresentation of the debates arises, the offender is liable to punishment for committing a breach of privileges and contempt of the House.

The publication of false or distorted partial or injurious report of debates or proceedings of the House or its Committees or wilful misrepresentation or suppression of speeches of particular members, is an

1977 ஜூலை 23] [பேரவைத் தலைவர்]

offence of the same character as the publication of libels upon the House, its Committees or members: and the persons who are responsible for such publication are liable to be punished for a breach of privilege or contempt of the House" . . . (Practice and Procedure of Parliament by Kaul and Shakdher—page 242)

அவ்வாறே, மே பாராளுமன்ற முறை பற்றிய புத்தகத்திலும் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது—

"Analogous to the publication of libels upon either House is the publication of false or perverted, or of partial and injurious reports of debates or proceedings of either House or committees of either House or misrepresentations of the speeches of particular members."

மேற்கண்டவாறு கூறிவிட்டு,

the following are instances of misconduct in connection with the publication of debates which has been treated as a breach of privilege என்று "suppressing speeches of particular members"

என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே அவையினது நடவடிக்கைகளை பத்திரிகைகள் வெளியிடும்போது எழுத்துக்கு எழுத்து பத்திரிகையில் வெளியிட முடியாது என்றாலும், வெளியிடப்படுவது அவையினது நடவடிக்கைகளை குறைத்துக் கூறாமல், முழுமையாக அதனது கருத்தை அல்லது சுருக்கத்தை வெளியிட வேண்டுமென எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு மரபு ஆகும். அம்மரபை பத்திரிகைகள், அவர்களுக்கு ஏற்ற அல்லது விரும்பும் பகுதிகளை மட்டும் முக்கியத்துவம் கொடுத்து மற்ற நடவடிக்கைளை அல்லது மற்ற உறுப்பினர்கள் பேசியதை அவர்களது பத்திரிகையில் குறிப்பிடாவிடில் உறுப்பினர் திரு. உமாநாத் கூறியது போல், அன்று அவையில் அப்பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்கள் மட்டுமே பேசினார்கள், மற்றவர்கள் பேசவில்லை என்ற கருத்து நிலவும் நிலை ஏற்படும். இது பத்திரிகைகளுக்கு தெரிந்திருந்தாலும், இவற்றை வேண்டுமென்றே வெளியிட்டு விட்டு பின்னால் உறுப்பினர்கள் உரிமைப் பிரச்சினை எழுப்பும்போது, ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி தங்களுக்கு அவையின் நடவடிக்கைகளை மறைக்க வேண்டுமென்ற எண்ணம் ஏதும்

இல்லை என்ற பதிலையும் அளிக்கிறார்கள். இவை எல்லாம் நமது பாராளுமன்ற மரபுக்கும், பத்திரிகை சுதந்திரத்திற்கும் முரணானது.

இப்பிரச்சினையில், மாலை முரசு பத்திரிகை அவையினது உரிமையை மீறி இருந்தாலும், இம்மாதிரி பிரச்சினையில் அவை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இருந்தாலும், அவை தனது கண்ணியத்தைக் கருதியும் பரந்த நோக்கத்தினாலும் இம்மாதிரி உரிமை மீறல்களை பொருட்படுத்துவதில்லை. இதையே ஒரு வாய்ப்பாகக் கொண்டு அவையினது உரிமைகளை மீறுவது என்பதும் முறையாகாது.

ஆறுவது சட்ட மன்றப் பேரவை ஆரம்பத்தில் ஒரு சில நடவடிக்கைகளை இம்மாதிரியான பிரச்சினைகளில் நமது அவை மிகவும் கடுமையாக இன்றி, சற்று பரந்த நோக்கோடு, எவ்வித நடவடிக்கையும் இல்லாது விட்டுவிடலாம் என்று கருதுகிறேன்.

ஆயினும், பத்திரிகைகளுக்கு ஓர் எச்சரிக்கை செய்வது நலம். பத்திரிகைகளின் உரிமைகள் எவ்வளவுதூரம் காக்கப் படவேண்டுமென்று பத்திரிகைகள் விரும்புகின்றதோ, அவ்வாறே அவர்களும் இப்பேரவையினது உரிமைகளும் மதிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில், இந்த அவையின் நடவடிக்கைகளுக்கு உரிய மதிப்பையும் மரியாதையையும் கொடுக்க வேண்டும். அவ்வாறு நடைமுறையில் செயல்படும்போது இவ்வவையின் நடவடிக்கைகளை திரித்தோ, மாற்றியோ அல்லது வேறு வகையிலோ குறை கூறும் அளவுக்கு இல்லாது அவையின் நடவடிக்கைகளை வெளியிடவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இப்பிரச்சினையை இத்துடன் முடிக்கலாம் என்று கருதி இப்பத்திரிகையின்மீது தொடர்ந்து வேறு நடவடிக்கை ஏதும் தற்பொழுது தேவையில்லை என்று கருதுகிறேன். இம்மாதிரி தொடர்ந்து தவறுகள் ஏற்பட்டால் அவை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

(ஈ) 'முரசொலி' நாளேடுமீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 13—7—1977 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு எஸ். ஆர். இராதா அவர்கள் 9—7—1977 அன்று பேரவையில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி 10—7—1977 தேதியிட்ட முரசொலி பத்திரிகையில் முதல் பக்கத்தில் "சட்ட மன்ற நடவடிக்கை" என்ற தலைப்பிலும், "கலைஞர் எழுப்பிய கேள்விக்கு